**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் - ஜேஜசீஏ) - 2013**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்-ஜேஜசீஏ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2013 மார்ச் 14 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஜசீஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திடப்பட்ட எஸ்எல் -பி108 உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், தற்போதைய துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு நெடுஞ்சாலைகள அமைச்சு, உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு போன்றன நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை செயற்திட்டத்திற்காக ரூபா 20,993 மில்லியனிற்கு சமமான ஐ.ஜென் 12,381 மில்லியன் வழங்குவதற்கு உடன்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2019 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. .

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு

அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவீனங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 16,311,851 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்திற்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 138,558 |
| செயற்திட்ட முகாமைத்துவ செலவினம் | 9,081,098 |
| சிவில் வேலைகள் | 1,074,850 |
| ஆலோசணை | 6,017,345 |
| | 16,311,851 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பட்ட ரூபா 814,533 ஆன தொகை செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தொலைபேசி மற்றும் தொடர்பாடல் முறைமை பொருத்துவதற்காக செலவழித்த ரூபா 531,216 ஆன தொகை மூலதனச் செலவினமாகக் கருதாமல் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 5.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

செயற்திட்டத்தின் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பணவளிப்பு ரூபா 5,361,141 ஆக இருந்தது அதேநேரம் பொதுத்திறைசேரியால் வழங்கப்பட்ட தகவல்களின்படி ரூபா 5,465,650 ஆன தொகை பணவளிப்புச் செய்யப்பட்டிருந்தது. ரூபா 104,509 ஆன வித்தியாசத்திற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

செயற்திட்டத்தால் தனியான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படுவதற்கு, பதிலாக விசேட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் முகாமை செய்யப்பட்ட செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களிற்காக பொதுவான பதிவேடு பேணப்பட்டிருந்தது.

### 5.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேந்தலைக் கட்டணங்களாக 2013 திசெம்பர் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 480,845 ஆன தொகை அனுப்பப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதிக்கான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|
| | ஜ.யென் மில்லியின் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 12,381 | 20,993 | - | 5.3 |
| இலங்கை அரசாங்கம் | 3,751 | 6,336 | 7.5 | 7.5 |
| | 16,132 | 27,329 | 7.5 | 12.8* |

* ஆண்டின் இறுதியில் முற்பணங்கள் மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிராமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் இத்தொகை உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

ஆலோசனையாளரால் விரிவான வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பாலங்களின் நிர்மாண வேலைகள் 2013 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 ஆலோசனை

பாலங்களின் நிர்மாணத்திற்கான ஆலோசணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் காரணங்கள் காரணமாக செயற்திட்டத்தால் முறையற்ற விதமாக அமுலாக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆலோசனையாளர் 2013 பெப்ரவரி 09 இல் செயற்திட்டத்துடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 ஒக்தோபர் 21 இல் ஆலோசனையாளருக்கு ஜ.யென் 2,917,000 மற்றும் ரூபா 1,178,100 ஆன கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது, ஆலோசனையாளர் செயற்திட்டத்துடன் உடன்படிக்கை கைசாத்திடுவதற்கு முன்னர் வேலைகளை தொடங்கியிருந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 6.5(அ) ஆம் பிரிவின் பிரகாரம், 12 சம தவணைகளில் தொழிலாரம்பிப்பு முற்பணம் அறவிடப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், தொழிலாரம்பிப்பு முற்பணம் அறவிடப்படாமல் பின்னர் ஆலோசனையாளருக்கு ரூபா 5,361,141 தொகையான இடைக்காலக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தொழிலாரம்பிப்பு முற்பண அறவீட்டுக் காலம் 2015 மார்ச் வரை நீடிக்கப்பட்டிருந்தது, 2015 சனவரி 31 வரை செய்யப்பட்டிருந்த தொழிலாரம்பிப்பு முற்பணங்களில் செய்யப்பட்ட உத்தரவாத பிணைமுறி நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆலோசனை உடன்படிக்கையின் குறிப்புரை நிபந்தனையின் 6.5(1) ஆம் உட்பிரிவின் பிரகாரம், சகல இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்களும் அவசியமான ஆதார ஆவணங்களுடன் நிரூபிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ஆதாரமான ஆவணங்களை

முன்வைக்காமல் ஆலோசனை வேலைகளில் ரூபா 823,200 ஒட்டுமொத்தத் தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஆலோசனை உடன்படிக்கையின் குறிப்புரை நிபந்தனையின் 3 ஆம் உட்பிரிவின் பிரகாரம், விரிவான வடிவமைப்புகளிற்கான சகல பரீட்சிப்பு மற்றும் அளவைகள் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், அந்த நடவடிக்கைகள் ரூபா 565,870 ஆன கிரயத்தில் வெளித்தரப்பினரால் செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினால் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருந்தது.

## 6.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நிதித்திட்டத்தின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட காசுப்பாய்ச்சல் வெளிநாட்டுக் கூறுகளின் கீழ் ரூபா 55.8 மில்லியனிற்கு சமமான ஜ.ஜென் 45 மில்லியன் மற்றும் உள்ளூர் கூறுகளின் கீழ் ரூபா 4 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், வேலை நிகழ்ச்சித்திட்டம் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 7.56 மில்லியனிற்கு சமமான ஜ.ஜென் 2.91 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 3,152,321 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் பயன்படுத்தப்படாத காசு மீதியில் கடனளிப்பு முகவரால் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் எவ்(II) ம் பட்டோலையின் பிரகாரம், செயற்திட்டமானது பெறுமதி சேர் வரியின் கொடுப்பனவிலிருந்து விலக்கழிப்பிற்காக தகுதியுடையதாக உள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது வரி விலக்கழிப்புகளிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவற்றின் மீது ரூபா 23,557,307 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.